


**13. 03. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு.நரேந்திரமோடி 47 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை இன்று அஸ்ஸாம் மாநிலத்தில் துவக்கிவைக்கிறார்.

2. நாட்டின் ரயில்வே துறை 90 சதவிகித செயல்பாட்டுடன் சாதனை படைத்துள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. தமிழ்நாட்டிற்கான ஜல்ஜீவன் இயக்க நிலுவை தொகையை உடனடியாக விடுவிக்க முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

4. தமிழக மக்களின் ஆரோக்கியத்தை உறுதி செய்யும் நடைபயிற்சி இரண்டாம் கட்ட திட்டத்தை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் இன்று தொடங்கிவைத்தார்.

5. ஸ்விஸ் ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

**************

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி 47 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை இன்று அஸ்ஸாம் மாநிலத்தில் துவக்கிவைக்கிறார்.

தலைநகர் குஹாத்தியில் வேளாண் நிதி உதவி திட்டத்தின் 22-ஆவது தவணை தொகையையும், விவசாயிகளின் வங்கி கணக்கில் இன்று விடுவிக்கிறார்.

இதன்படி நாடுமுழுவதும் 9 கோடிக்கும் அதிகமான விவசாயிகளின் வங்கி கணக்கில் தலா 2 ஆயிரம் ரூபாய் வீதம், 18 ஆயிரத்து 640 கோடி ரூபாய் விடுவிக்கப்பட உள்ளது.

இதுவரை இந்த திட்டத்தின் கீழ் 4 லட்சத்து 9 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயிகளின் வங்கி கணக்கில் விடுவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்தொகை இடுபொருட்கள், கால்நடை பராமரிப்பிற்கு பெரிதும் பயனளிக்கும் என்று தஞ்சையை சேர்ந்த விவசாயி தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

இதனிடையே சிலி நாட்டின் அதிபராக ஜோஸ் ஆண்டனியோ காஸ்ட் பதவி ஏற்றதற்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவருடைய தலைமையில் வர்த்தகம், தொழில்நுட்பம் எரிசக்தி துறைகளில் இந்தியா சிலி இடையிலான நட்புறவு மேலும் வலுப்பெறும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**************

அஸ்விணி வைஷ்ணவ்

நாட்டின் ரயில்வே துறை 90 சதவிகித செயல்பாட்டுடன் சாதனை படைத்துள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு.அஸ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், 77 சதவிகித காலம் தவறாமையை ரயில்கள் கடைபிடித்துள்ளதாக எடுத்துரைத்தார்.

செயல்பாட்டு திறனை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், அதிநவீன தொழில்நுட்ப கருவிகள் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்டவை இதில் அடங்கும் என்றார்.

நம் ரயில்களின் காலம் தவறாமை அட்டவணை ஃபிரான்ஸ் ஜெர்மனி இத்தாலி நாடுகளுடன் ஒப்பிடும் வகையில் உள்ளதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

உலக அளவில் ரயில்வே செயல்பாட்டு திறனில் உயர் நிலையில் இருக்கும் ஜப்பானை முந்த இந்தியா செயலாற்றுவதன் அவசியத்தையும் திரு.அஸ்விணி வைஷ்ணவ் வலியுறுத்தினார்.

**************

கிரிராஜ்சிங்

உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்பதன் மூலமும் சுய சார்பு பாரத திட்ட செயல்பாட்டாலும் நாட்டின் கைத்தறி துறை வலுப்பெற்றிருப்பதாக மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு.கிரிராஜ்சிங் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அமைச்சர், நம் கைத்தறி துறை தனித்துவ அடையாளத்தை பிரதிபலிப்பதாக குறிப்பிட்டார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் தலைமையில் 2015-ம் ஆண்டு, முதன்முதலாக தேசிய கைத்தறி தினம் கொண்டாடப்பட்டதாகவும், இதன்மூலம் கைத்தறி பணிகளுக்கான அங்கீகாரம் முன்னெடுக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

உலகின் 95 சதவிகித கைவினை பொருட்கள் நம் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டவை என பெருமிதம் தெரிவித்த அமைச்சர், 70 சதவிகித்திற்கும் மேற்பட்ட பெண்கள் கைத்தறி துறையில் பணியாற்றுவதாக எடுத்துரைத்தார்.

திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படுவதால் சுய வேலை வாய்ப்பின் முக்கிய மையமாக கைத்தறி திகழ்கிறது என்றார்.

**************

நாடாளுமன்றம்

சமையல் எரிவாயு தட்டுப்பாடு உட்பட பல்வேறு பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை பிற்பகல் 2 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டது.

அவை இன்று கூடியதும், அவை தலைவர் திரு.ஓம்.பிர்லா கேள்வி நேரத்தை நடத்த முற்பட்டபோது எதிர்கட்சி உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சனைகளை எழுப்பி அமளியில் ஈடுபட்டதால் நிலவிய குழப்பங்களை அடுத்து அவைத்தலைவர் மக்களவையை நண்பகல் வரை ஒத்திவைத்தார்.

மீண்டும் அவை கூடியவுடன் அலுவல்கள் சுமூகமாக நடைபெற எதிர்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று அவை நடத்தும் அலுவலர் திருமதி சந்தியாரே கேட்டுக்கொண்டார்.

2025-26-ம் நிதியாண்டிற்கான இரண்டாவது கட்ட துணை மானியக்கோரிக்கைகள் மீதான விவாதத்தை அவர் நடத்த முற்பட்டபோது, எதிர்கட்சிகள் அவையின் மைய பகுதியில் குழுமி அமளியில் ஈடுபட்டதால் அவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

**************

மத்திய அரசு

உலகளாவிய நெருக்கடியில் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு உள்ளிட்ட எரிபொருட்களை பொதுமக்கள் சிக்கனமாக பயன்படுத்துமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

போதிய எரிபொருள் கையிருப்பில் இருந்தாலும் மேற்காசிய பகுதியில் போர் சூழல் நிலையற்றதாக காணப்படும் நிலையில் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே உலக அளவில் சமையல் எரிவாயு விநியோக நிலமை நெருக்கடியில் உள்ளதாகவும், இப்பிரச்சனை தொடர்பாக பிரதமர் திரு.நரேந்திரமோடி ஈரான் அதிபருடன் கலந்துரையாடியதாகவும் பிஜேபி உறுப்பினர் திரு.சஷாங்க் மணி தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டிய தருணம் இது என்று கூறிய அவர், அத்தியாவசிய பொருட்களை பதுக்க வேண்டாம் என கேட்டுக்கொண்டார்.

பொறுப்புடன் நடந்துகொள்வதன் மூலம் தேவையற்ற பீதியும், நீண்ட வரிசைகளில் காத்திருத்தலும் தவிர்க்கப்படும் என்றார்.

**************

யோகா

மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் சார்பில் சர்வதேச யோகா தினத்திற்கான 100 நாள் கவுண்டவுன் புதுதில்லியில் இன்று தொடங்கியது.

நாடுமுழுவதும் 100 இடங்களில் யோகாவின் நன்மைகளை மக்களிடையே கொண்டு செல்லும் வகையில் இன்றுமுதல் யோகா ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

**************

முதலமைச்சர் கடிதம்

தமிழக கிராமப்புறங்களில் நிலையான குடிநீர் விநியோகத்தை உறுதிசெய்திட ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ் நிலுவையில் உள்ள 3 ஆயிரத்து 112 கோடி ரூபாயை உடனடியாக விடுவிக்க முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூன்றாம் கட்ட பணிகளுக்கான ஒப்புதலையும், அதற்கான நிதி உதவியையும் வழங்கிட வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

**************

முதலமைச்சர்

சேலம், நாமக்கல், கோவை, திருவண்ணாமலை, திருப்பூர், கரூர் மாவட்டங்களில், ஆயிரத்து 843 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மேம்படுத்தப்பட்ட புறவழிச் சாலைகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இன்று திறந்துவைத்தார்.

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி அனல் மின் நிலையத்தில், 660 மெகாவாட் திறன்கொண்ட, முதல்அலகின் மின் உற்பத்தியையும் முதலமைச்சர் இன்று காணொலி மூலம் தொடங்கிவைத்தார்.

அரசு கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளுக்கு தேர்வு செய்யப்பட்ட உதவி பேராசிரியர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் முதலமைச்சர் இன்று வழங்கினார்.

**************

உதயநிதி

தமிழகம் 11.19 சதவிகித வளர்ச்சியுடன் முன்னோடி மாநிலங்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளது என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தர்மபுரி மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை இன்று தொடங்கிவைத்து பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகளை வழங்கிபேசிய அவர், மகளிர் சுய உதவிக்குழுவினர், மாற்றுத்திறனாளிகள், உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகைளில் நல திட்டங்களை அரசு செயல்படுத்துவதாக எடுத்துரைத்தார்.

**************

மா.சுப்பிரமணியன்

தமிழக மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த அனைத்து மாவட்டங்களிலும் "நடைபயிற்சி இரண்டாம் கட்டம்" இன்று தொடங்கப்பட்டதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் இந்த திட்டத்தின் கீழ் நடைபயிற்சியை தொடங்கிவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் நடைபயிற்சியின் மூலம் உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை மற்றும் இதய நோய்கள் குறைவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன என்றார்.

வாய்ஸ்

**************

கொங்குநாடு

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் திமுக தலைமையிலான மத சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சிக்கு இரண்டு தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதற்கான உடன்படிக்கை திமுக தலைவரும் முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் முன்னிலையில் இன்று எட்டப்பட்டது.

இரண்டு தொகுதிகளிலும் உதய சூரியன் சின்னத்தில் அக்கட்சி போட்டியிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**************

சசிகலா

மறைந்த முன்னாள் முதலமைச்சரின் நெருங்கிய தோழியான திருமதி சசிகலா நடராஜன் தமிழகத்தில் இன்று "அகில இந்திய புரட்சி தலைவர் மக்கள் முன்னேற்ற கழகம்" என்ற புதிய கட்சியை தொடங்கியுள்ளார்.

சென்னையில் இன்று கட்சியின் பெயரை அறிவித்த அவர், கட்சியின் சின்னம் தென்னந்தோப்பு என்று கூறினார்.

**************

இருவரி

வேலூர் மாவட்டம் சதுப்பேரியில் 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட சுற்றுலா தளத்தை ஆட்சித்தலைவர் திருமதி சுப்புலெட்சுமி இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவந்தார். பொதுமக்களின் உடல்நலன் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களை கருத்தில் கொண்டு இந்நடவடிக்கை என்றார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நாளை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டத்தில் காவிரி டெல்டா தூர்வாரும் திட்டத்தை சிவகாமசுந்தரி ஓடையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சிபி ஆதித்ய செந்தில் குமார் இன்று தொடங்கிவைத்தார்.

18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 585 கிலோ மீட்டர் நீளத்திற்கு தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**************

கோவில்

ஈரோடு அருள்மிகு பண்ணாரியம்மன் திருக்கோவில் குண்டம் திருவிழா வரும் 16ஆம் தேதி பூச்சாற்றுதலுடன் தொடங்குகிறது.

முக்கிய நிகழ்ச்சியான குண்டம் இறங்கும் நிகழ்ச்சி வரும் 31ஆம் தேதி நடைபெற உள்ளது.

பக்தர்களின் வசதிக்காக தற்காலிக காத்திருப்பு அறைகள் அமைக்கும் பணிகளில் கோவில் நிர்வாகம் ஈடுபட்டுள்ளது.

**************

பேட்மிண்டன்

ஸ்விஸ் ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை - டென்மார்க் இணையை இன்று எதிர்கொள்கிறது.

**************

ஹாக்கி

உலக கோப்பை மகளிர் ஹாக்கி தகுதிசுற்று அரையிறுதியில் ஹைதராபாத்தில் இன்று இரவு ஏழரை மணிக்கு இந்தியா – இத்தாலியை எதிர்கொள்கிறது.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது